தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண். 13/மா/2021
நாள். 06.12 .2021

திரு A. சதீஷ்குமார்,
சென்னை – 600 081. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 021. – எதிர்மனுதாரர்கள்
செயற்பொறியாளர்,
மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 021.

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, சாஸ்திரி நகர் எண்.3/2, 1–வது தெருவில் வசிக்கும் திரு A. சதீஷ்குமார், சமூக ஆர்வலர் அவர்களின் 10.03.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.03.2021–ல் பெறப்பட்டு 13/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, சாஸ்திரி நகர் எண்.3/2, 1–வது தெருவில் வசிக்கும் திரு A. சதீஷ்குமார், சமூக ஆர்வலர், சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை, மண்டலம் 4, வார்டு 38, பகுதி 09, நேதாஜி நகர் A தெரு முதல் கருணாநிதி நகர் 3 வது தெரு பிள்ளையார் கோவில் (ECI matriculation school backside) வரை கடந்த

வருடம் 14.10.2010 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் மூலம் புதிய தார் சாலை அமைக்கப்பட்டது. மேற்கண்ட இந்த சாலை அமைக்கும் பணியின்போது முறையாக விதிமுறைகளை கடைபிடிக்காமல், பழைய சாலையை பெயர்த்து எடுக்காமல் அப்படியே புதியதாக சாலை அமைத்து இந்த சாலையின் மட்டத்தினை (அளவினை) உயர்த்தி விட்டனர். மேலும் இந்த சாலை தரமாக அமைக்கப்படாததால் அமைக்கப்பட்ட இரு மாதங்களிலேயே கையால் பெயர்த்து எடுக்கும் நிலையிலேயே உள்ளது.

மேலும் இது தொடர்பாக தான் அளித்த புகார் மனுவிற்கு பதில் அளித்த சென்னை மாநகராட்சி அலுவலர்கள், மேற்கண்ட சாலை அமைக்கும்போது அந்த தெருவில் உள்ள சில நபர்கள் பழைய சாலையின் மீது அப்படியே சாலையை போடும்படி கூறியதாகவும் அதனாலேயே பழைய சாலையை பெயர்த்து எடுக்காமல் போடப்பட்டது என பதில் அளித்துள்ளனர். இது சட்டப்படி சரியான செயல் இல்லை. சாலையை பெயர்த்து எடுக்காதது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு அவர்களின் எழுத்துப்பூர்வமான இசைவினை அல்லது முன் அனுமதியை பெற்றார்களா, அல்லது இது தொடர்பாக மன்றத்தில் திருத்தல் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதா, ஒப்பந்தத்தில் எழுதப்பட்டு அதை செய்யாமல் விட்டதால் அதற்கான பிடிப்பு தொகையை சாலை அமைத்த ஒப்பந்ததாரரிடமிருந்து சென்னை மாநகராட்சி பெற்றுள்ளதா போன்றவற்றை தீர விசாரித்தால் இதில் நடைபெற்ற முறைகேடுகளை அறிய இயலும்.

மேலும் எங்கள் பகுதியில் வசிக்கும் பொதுமக்களில் சிலர் தங்களின் சொந்த பயன்பாட்டிற்காக சாலையை தோண்டி குழாய் பதிப்பு அல்லது வேறு சேவைகள் செய்யும்போது அவர்களிடம் முறையாக அனுமதி பெற வைத்து அதற்கான தொகையை சென்னை மாநகராட்சிக்கு செலுத்த முற்படாமல் அந்த சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு சில ஆயிரம் ரூபாய் தொகையினை அன்பளிப்பாக பெற்றுக்கொண்டு அனுமதித்து விடுகின்றனர். இதனால் சட்டப்படி சென்னை மாநகராட்சிக்கு வரவேண்டிய வரவுகள் தடுக்கப்பட்டது. எங்கள் பகுதியில் இதுபோன்று ஐம்பது முறைகளுக்கு மேற்பட்டு நடந்துள்ளது, கள ஆய்வு மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்தால் இதில் உள்ள தவறுகளை கண்டுபிடிக்க முடியும் என்றும் தனது புகார் மனுவினை தீர விசாரித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது தவறு இருக்கும்பட்சத்தில் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க ஆணையிடவும், விதிகள் மீறி அமைக்கப்பட்ட சாலையால் உயர்த்தப்பட்ட எங்கள் பகுதி சாலை பழைய நிலைமைக்கு வர தேவையான ஆணைகள் இடவும் அதற்குண்டான செலவுத்தொகையை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து வசூலிக்கவும் ஆணையிடுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோர்களை 20.04.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.03.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு கொரோனா தொற்று காரணமாக மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டு அந்த தகவல் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோர்களுக்கு தொலைபேசிமூலம் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் 11.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.07.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. 11.08.2021 அன்று நேரடி விசாரணையில் முறையீட்டு மனுதாரர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். தனது வாக்குமூலத்தில் " சென்னை, தண்டையார் பேட்டை, மண்டலம்–4, வார்டு 38 பகுதி 9, நேதாஜி நகர் A தெரு முதல் கருணாநிதி நகர் 3–வது தெரு வரையில் சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் மூலம் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்றது. மேற்கண்ட சாலை அமைக்கும் பணியின்போது முறையாக விதிமுறைகளை கடைபிடிக்காமலும், பழைய சாலையை பெயர்த்து எடுக்காமலும், அதன் மேலேயே புதிய சாலை அமைத்து, சாலையின் மட்டத்தினை உயர்த்தி விட்டனர். மேற்கண்ட சாலையை தரமாக அமைக்காததால், சாலை அமைக்கப்பட்டு இரண்டு மாத காலத்திலேயே கையாலேயே பெயர்த்து எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக சமர்ப்பிக்கின்றேன். மேற்கண்ட தரமற்ற சாலையை அமைக்கக் காரணமான சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்திட ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்நேர்வு தொடர்பான வேறொரு நாளில் என்னை விசாரணைக்கு அழைக்கும்பட்சத்தில் மேற்கண்ட சாலை குறித்த புகைப்படம் மற்றும் வீடியோக்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

4.மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர் மண்டலம் –4 ஆகியோர்களை 24.08.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.08.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் மற்றும் மண்டல அலுவலர், செயற்பொறியாளர் ஆகியோர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அன்றைய தினம் மனுதாரர் விசாரணையில் ஆஜராகவில்லை.

5. பெருநகர சென்னை மாநகராட்சி 4–வது மண்டல உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் இருவரும் 24.08.2021 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணையில் ஆஜராகி, உதவிபொறியாளர் தமது வாக்குமூலத்தை அளித்தார். அதில் " சென்னை, தண்டையார்பேட்டை, நேதாஜி நகர், A தெரு முதல் கருணாநிதி நகர் 3–வது தெரு, பிள்ளையார் கோவில் வரை அமைக்கப்பட்டுள்ள தார் சாலையின் 70 மீட்டர் நீளம் மற்றும் 5 மீட்டர் அகலத்திற்கு சாலைப்பணி (relaying) மேற்கொள்ளப்பட்டது. இச்சாலைப்பணியை மேற்கொள்ள உரிய மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கான அனுமதி செயற்பொறியாளரிடமிருந்து பெறப்பட்டது. இதற்கான மதிப்பீடு ரூ.3.23 (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தி மூன்றாயிரம் மட்டும்) இலட்சமாகும். மேற்கண்ட சாலைப்பணிக்கு ரூபாய் 1.24 (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்) லட்சம் செலவிலேயே முடிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட சாலைப்பணியை மேற்கொண்டதில் மனுதாரர் கூறியுள்ளபடி எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன்.

மேலும் அன்றைய தினமே இருவரும் அளித்த எழுத்து பூர்வ வாக்குமூலத்தில் சாலைக்கு செலவான தொகை மற்றும் அளவு புத்தகத்தின் நகலை ஒரு வார காலத்திற்குள் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்கள்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி 4–வது மண்டல அலுவலர் தமது 02.09.2021 நாளிட்ட அறிக்கையில் " மண்டலம் –4, பகுதி–9, வார்டு–38–ல், 10 தார்ச்சாலைகள் அமைக்க ஒப்பந்ததாரர்

மூலம் ஒப்பம் கோரப்பட்டது. மேற்படி 10 தார்சாலைகளில் 9 தார்சாலை பெயர்த்து எடுத்து புதிய தார் சாலைகள் அமைக்கப்பட்டது. இதில் நேதாஜி நகர் A தெரு விரிவு மட்டும் 70 மீட்டருக்கு பணியின் மதிப்பு ரூ.2,77,431.49, (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து நானூற்றி முப்பத்தி ஒன்று மற்றும் நாற்பத்தி ஒன்பது பைசாக்கள் மட்டும் ) மதிப்பீடு தொகை ரூ.3,23,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தி மூன்றாயிரம் மட்டும்) –ற்கு அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு, தார்சாலை அமைக்கும்பணி நடைபெற்றது. அவ்வாறு சாலை அமைக்கப்படும் போது, அந்த தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் அதிகமாக தேங்கி நிற்பதால், பழைய சாலையை பெயர்த்து எடுக்காமல், அதன் மேலேயே சாலை அமைக்க வேண்டி பொதுமக்கள் கடிதம் அளித்தனர். அதன் பொருட்டே, நேதாஜி நகர் ஏ தெரு விரிவு சாலையில் 57 மீட்டருக்கு Bituminous Macadam – 50 mm thickness மற்றும் BCCMPI (v) – 30 mm thickness கொண்டு புதிய தார்சாலை அமைக்கப்பட்டது. மேலும், புதிய தார்சாலை அமைக்க ரூ.1,24,080.83/–(ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து எண்பது மற்றும் எண்பத்தி மூன்று பைசாக்கள் மட்டும் ) செலவு செய்யப்பட்டது. அதன் அளவீட்டு புத்தக எண்.32/2020–21, பக்கம் எண்.05 முதல் 07 வரையிலான நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 4வது மண்டல அலுவலர் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

7. மனுதாரர் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள நேதாஜி நகர் A தெரு விரிவு மட்டும் 70 மீட்டருக்கு பணியின் மதிப்பு ரூ.2,77,431.49 (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து நானூற்றி முப்பத்தி ஒன்று மற்றும் நாற்பத்தி ஒன்பது பைசாக்கள் மட்டும்) மதிப்பீடு தொகை ரூ.3,23,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தி மூன்றாயிரம் மட்டும்) அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு, தார்சாலை அமைக்கும்பணி நடைபெற்றுள்ளது. அவ்வாறு சாலை அமைக்கப்படும் போது, அந்த தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் அதிகமாக தேங்கி நிற்பதால், பழைய சாலையை பெயர்த்து எடுக்காமல், அதன் மேலேயே சாலை அமைக்க வேண்டி பொதுமக்கள் கடிதம் அளித்துள்ளனர். அதன் பொருட்டே, நேதாஜி நகர் A தெரு விரிவு சாலையில் 57 மீட்டருக்கு Bituminous Macadam – 50 mm thickness மற்றும் BCCMPI (v) – 30 mm thickness கொண்டு புதிய தார்சாலை அமைக்கப்பட்டது என்பதை அறியமுடிகின்றது. மனுதாரர் தவிர ஏனைய பொதுமக்கள் யாரும் இது தொடர்பாக எந்தவித புகாரும் அளிக்கவில்லை என தெரியவருகிறது. மேலும் மனுதாரர் 11.08.2021 நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தில் தன்னை வேறொரு நாளில் விசாரணைக்கு அழைக்கும்பட்சத்தில் மேற்கண்ட சாலை குறித்த புகைப்படம் மற்றும் வீடியோக்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிப்பதாக தெரிவித்திருந்தார். ஆனால் 24.08.2021 அன்று நடந்த மறு விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும் மேற்கண்ட சாலை குறித்த புகைப்படம் மற்றும் வீடியோக்களையும் சமர்ப்பிக்கவில்லை. நேதாஜி நகர் A தெருவில் வசிக்கும் மக்கள் அளித்துள்ள விருப்ப கடிதத்தின் அடிப்படையிலேயே சாலையை பெயர்த்து எடுக்காமல் அதன் மேலேயே சாலை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மண்டல அலுவலரின் அறிக்கையினை ஏற்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு A. சதீஷ்குமார்,
எண்.3/2, 1–வது தெரு,
சாஸ்திரி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2)மண்டல அலுவலர்,
மண்டலம் –4,
சென்னை பெருநகர மாநகராட்சி,
எண்.266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணார்பேட்டை,
சென்னை – 600 021.

3)உதவி செயற்பொறியாளர்,
மண்டலம் –4, பகுதி 9, வார்டு 38,
சென்னை பெருநகர மாநகராட்சி,
எண்.266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணார்பேட்டை,
சென்னை – 600 021.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்